Indian Vedic School
Language of the Gods

# FAMOUS MORAL STORIES

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 1


















Indian Vedic School

Language of the Gods

# FAMOUS MORAL STORIES

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 1


















# INDEX


| | |
|---|---|
| ADVICE OF FAKIR | 1-7 |
| CHALLENGE | 8-15 |
| CHARIOT TOUR | 16-23 |
| CORRUPTION | 24-33 |
| COWARD | 34-40 |
| DECISION | 41-48 |


சாதுவின் போதனை


பிச்சை போடுங்கள்,ஐயா.
ஷ்... தொந்தரவு பண்ணாதே போ...
கடவுள் உங்கள் குடும்பத்தை வாழ்த்துவார் ஐயா.
வாயை மூடிக்கொண்டு இங்கிருந்து போ...
இந்தப் பிச்சைக்காரனுக்காக கொஞ்சம் செலவு பண்ணக்கூடாதா? நீ அடுத்த பிறவியில் கழுதையாகப் பிறக்கவேண்டும் சாபம் என்று இடுகிறேன்...
அந்த நாள் முழுவதும் ராஜாவிற்கு அந்த பிச்சைக்காரனின் வார்த்தைகள் தொந்தரவு செய்தன.


சுசீலா, நான் உன் கணவனாக அடுத்த பிறவியில் அமைய நீ என்ன செய்வாய்?
அதற்கு லஞ்சமாக எதையாவது நீ எனக்கு தரவேண்டும், ஹா ஹா.... விளையாட்டுக்குச் சொன்னேன்...
நான் என்ன செய்வேன், தினமும் கடவுளை கும்பிடுவதைத் தவிர.


தன் மனைவியிடம் பேசிய பிறகு தன் தந்தையிடம் சென்று அதே கேள்வியைக் கேட்டான்.
மகனே என்னையும் உன் அம்மாவையும் நன்றாகப் பார்த்துக்கொள், எங்களுக்குப் பிறகு எங்கள் நினைவாக ஒரு கோயிலைக் கட்டு. அடுத்த பிறவியிலும் எங்கள் மகனாக வேண்டும் என்ற உன் விருப்பம் நிறைவேறும்.
நினைவில் கொள் மகனே, ஒரு தந்தையின் ஆசிகள் அனைத்தையும் நிறைவேற்றி வைப்பார் கடவுள்.
தந்தையே, ஒரு மகன் தன் பெற்றோர்களை பார்த்துக்கொள்ளவில்லை என்றாலும் அவர்களின் ஆசீர்வாதம் அவனுக்கு உண்டு. ஏனென்றால் அன்பு நிபந்தனைகள் இல்லாதது.
மகனே, இப்படி ஒரு அகந்தையும் மனப்பாங்கும் உள்ள ஒருவன் அடுத்த பிறவியில் கழுதையாகத்தான் பிறப்பான்.


மகனே எல்லாம் கடவுளின் விதிப்படித்தான் நடக்கிறது. எதுவும் நம் கையில் இல்லை.
ராஜா தன் தந்தையின் வார்த்தைகளை கேட்டு மனம் உடைந்தான்.
பிச்சைக்காரனின் சாபமும் அப்பாவின் வார்த்தையும் பலித்துவிட்டால் என்னாவது... இனியும் நான் அமைதி இழக்கமாட்டேன், சாதுவிடம் போய் இதற்கு ஒரு வழி கேட்போம்.
ராஜா நடந்த எல்லாவற்றையும் கூறினான்.


உன் பெற்றொருக்கு நீ அன்போடு பணிவிடை செய். உன் மனைவியையும் குழந்தைகளையும் நன்றாகப் பார்த்துக்கொள் கடவுள் உனக்கு அடுத்த பிறவியில் நல்ல வாழ்க்கையைத் தருவார்
இல்லை இல்லை அவர்களெல்லாம் சுயநலக்காரர்கள். அவர்கள் இதற்கு தகுதியானவர்கள் கிடையாது.
உனக்கு உன் குடும்பத்தின் மீது தவறான எண்ணம் உள்ளது. உன்னுடைய வருங்கால சூழ்நிலையைப் பற்றி யோசித்துபார். உன்னை உன் மக்கள் நீ செய்ததைப்போல் செய்தார்கள் என்றால்.
இல்லை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. நான் உங்களின் கருத்தை ஒப்புக்கொள்கிறேன். எனக்கு என் தவறை உணரவைத்தீர். பெற்றோர்களின் முக்கியத்தை உணர வைத்தீர்கள் நான் கண்டிப்பாக அவர்களை பார்த்துக்கொள்வேன்.


மகனே, உன் மாற்றத்தை கண்டு மகிழ்ந்தேன்.
ஸ்வாமி, நான் அந்த பிச்சைக்காரனின் சாபத்தை கண்டு கவலைப்படுகிறேன்.
உன்னுடைய கடமை உன் பெற்றோரை கவனிப்பது மட்டுமல்ல எல்லோரையும் துன்பத்திலிருந்து காப்பதும்தான். மக்களின் சேவையே மகேசனின் சேவை.
நீங்கள் என் கண்ணைதிறந்துவிட் டீர்கள் உங்களின் அறிவுரைக்கு நன்றி.
மகிழ்ச்சியுடன் ராஜா வீடு திரும்பி தன் குடும்பத்தை அன்புடன் கவனித்து கொண்டு ஏழைகளுக்கும் உதவி செய்து வாழ்ந்தான்.
முடிவு


சவால்


ஒரு நாள், விஜயநகரப்பேரரசர் கிருஷ்ணதேவராயரின் அரசவையில்...
அரசே ! நான் கோல்கொண்டா நகரில்இருக்கும் பரந்குஷ் என்கிற புலவன்.
உங்கள் **அரசவையில்**., என் திறமையை காட்ட ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்.
சரி! அனுமதிக்கிறேன் , மற்றும் நான் உனக்கு இங்கே தங்குவதற்கான வசதியையும் செய்து தருகிறேன்.
அன்று இரவு, ஒரு வேலையின் காரணமாக, தெனாலி ராமன் நாட்டை விட்டு வெளியே சென்றான். கிருஷ்ணதேவராயரிடம் ஒரு அரேபிய குதிரை ஒன்று இருந்தது. அது வசிக்கும் இடம் வழியாக அவன் சென்றான்.


HEE! HEE! HEE!
HA! HA! HA!
HO! HO! HO!
ஏன் பைத்தியகாரனைப்போல் சிரிக்கிறீர்கள் ?!
கோல்கொண்டாவிலிருந்து இங்கு வந்த ஒரு புலவன், அரேபிய மொழியில் சில தமாஷ்கள் சொன்னான், அவை கேட்க மிகவும் நகைச்சுவையாக இருந்தன.
தெனாலிராமன் யோசனையில் மூழ்கினான்.


தெனாலிராமன் வேலை முடிந்து வீடுதிரும்பினான்.
நாளை பரந்குஷ் அவனது திறமையை எப்படி வெளிபடுத்தப் போகிறான் என்று அறிய ஆர்வமாக உள்ளேன்.
அடுத்த நாள்...
அரசே! நான் புலவர்களிடம் சில விடுகதைகள் கேட்க விரும்புகிறேன், அவர்கள் விடைஅளிக்கவேண்டும்.
நான் அவர்களிடம் நான்கு வார்த்தைகள் சொல்லுவேன். அதை வைத்து அவர்கள் நான்கு வாக்கியங்கள் உள்ள ஒரு கவிதையை எழுதவேண்டும். நான் நினைத்ததை அந்த கவிதை சொல்ல வேண்டும்.
புலவர்கள் இதற்கு விடையளிக்க வேண்டும். இல்லையெனில் தங்கள் தோல்வியை ஒப்புகொள்ள வேண்டும்.
சரி !! ஒப்புகொள்கிறோம்.


நான் சொல்லப்போகும் நான்கு வார்த்தைகள், மகாபாரத்தின் ஒரு பகுதியை அமைக்கும். அவை பிடிவாதம்,போர், மாலை, பாதுகாப்பு, ஆகும்.
அரசபையில் இருந்த புலவர்கள் அனைவரும் குழம்பினர்.
இதற்கு நான் விடையளிக்கிறேன். இந்த நான்கு வாக்கியங்கள் பகவான் கிருஷ்ணரால் குருராஜாவுக்கு சொல்லப்பட்டன. குருராஜா, உங்கள் மகன் துரியோதனன் பிடிவாதமாக இருக்கிறான். அதனால் ஒரு கடுமையான போர் நடைபெறும்.அப்போது நான் அணிந்திருக்கும் மாலையின் ஒரு இதழ் கூட பாண்டவர்களை நான் பாதுகாப்பேன்.
ஆமாம். தங்களின் விடை சரி.
அருமை !! தெனாலி ராமா.


அரசே ! இப்போது நான் பரன்குஷ்க்கு ஒரு விடுகதை அளிக்கிறேன்.
சரி.
என்னுடைய கேள்விக்கு விடை அளிக்கவில்லை என்றால் தங்கள் தோல்வியை ஒப்புகொள்ள வேண்டும்.
சரி ! ஒப்புக்கொள்கிறேன்
யானைகள் அங்குஷத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன, குதிரைகளுக்கு அருகில் பரன்குஷ் காணப்பட்டான்.
இது விடுகதை அல்ல ! இது என்னை அவமான ப்படுத்துவது போல் இருக்கிறுது. இதில் எந்த அர்த்தமும் இல்லை.


பொருள் இல்லாத விடுகதை கேட்டுவிட்டு, ஏன் நம் விருந்தாளியை அவமான ப்படுத்துகிறாய் தெனாலி ராமா ??
மகாராஜா !! என்னை மன்னியுங்கள். இந்த மனிதன் கோல்கொண்டா நகரில் இருந்து அனுப்பப்பட்ட ஒற்றன்
மகாராஜா !! நான் நேற்று தான் கண்டுபிடித்தேன். தாங்கள் வேண்டுமானால் விசாரித்து ப்பாருங்கள்.
பரன்குஷ், இந்த அரண்மனயில் உனக்கு தங்குவதற்கு நல்ல வசதி அளித்தும், உனக்கு குதிரை கொட்டத்தில்
என்ன வேலை ?


மகாராஜா !!
நான் தவறிழைத்தேன் என்னை
மன்னியுங்கள். நான் என்
அரசனின் ஆணைப்படி அவ்வாறு
செய்தேன்.
வீரர்களே !
இவனை சிறையில்
அடையுங்கள்.
தெனாலி ராமா. உங்கள் அறிவுத்
திறனை நான் பாராட்டுகிறேன்.
தாம் இந்த விஜயநகரத்தை .
காப்பாற்றியுள்ளீர்கள்
இதை
எடுத்துகொள்
தெனாலி ராமா . இது நான்
உனக்கு அளிக்கும் பரிசு.
நன்றி !!
மகாராஜா.
முடிவு.


ரதத்தில் சுற்றுலா



ஸ்ரவன்தி மாநகரம் ,வியாபாரம் செழிக்கும் தலைநகரமாகும். மகாராஜா மகேந்திரன் அந்த நாட்டை ஆட்சி செய்தார்.
அது வியாபாரம் செய்வதற்கான முக்கிய நகரமாகையால், வெவ்வேறு நாட்டு மக்கள் அங்குவந்தனர்.
மந்திரியாரே, மக்கள் குதிரையில், யானையில், மற்றும் மாட்டு வண்டியில் பயணம் செய்கின்றனர். நாம், பிரயாணம் எளிதாக, விரைவாக புதுவிதமான போக்குவரத்து வசதிகளை அமைத்துத்தர வேண்டும்.
நல்ல யோசனை அரசே!
நகருக்குள் போய் , நல்ல திட்டத்தை கொண்டுவருபவர்களுக்கு , பரிசு வழங்கப்படும் என்று அறிவிக்கலாம்.
இளைஞர்கள் வெவ்வேறு திட்டங்களை கொண்டுவந்திருந்தனர். அதில் சுமிதர் என்கிறவனின் யோசனை புது விதமாக நன்றாக இருந்தது.
மகாராஜா, என் பெயர் சுமிதர். நான் காஞ்சன் நகரிலிருந்து வருகிறேன்.



சுமிதர் எல்லோரின் பார்வைக்கும் ஒரு ரதத்தை நிறுத்தினான்.
இது தான் என் திட்டத்தின் வடிவமைப்பு.
இது ஒரு ரதம், இதே போல் எங்களிடம் நிறைய இருக்கிறது.
இந்த ரதத்தை, அரேபிய நாட்டு குதிரை இழுக்கும்,இது காற்றின் வேகத்தில் செல்லக்கூடியதாகும். இந்த ரதத்தின் சக்கரங்கள், அதிவேகமாக செல்லும்படி தயாரிக்கப்பட்டுள்ளன. உட்காரும் ஆசனத்தின் அடியில் ஸ்ப்ரிங் அமைந் துள்ளது. இது சாலையில் வரும் தடைகளை தாங்கும்.
இதன் விலை ?
தேவை என்றால் அதற்குரிய செலவு செய்தாகவேண்டும் சொகுசு ரதத்தில் பயணம் செய்ய 100 பொற்காசுகள். சாதாரண வண்டியில் பயணம் செய்ய 10 – 20 பொற்காசுகள்.
என்ன ?
மகாராஜா, இந்த வண்டிவியாபாரிகளுக்கும் பணக்கார்களுக்கும் மட்டுமே செய்யப்பட்டது. தயவுசெய்து, இதில் உள்ளவசதிகளைப் பார்க்கவும்:
1. இது பயண நேரத்தைக் குறைக்கும்.
2. இது மிகவும் வசதியானது.


மகாராஜாவிற்கு புது விதமான யோசனைகள் மிகவும் பிடிக்கும். அதனால், இதை தேர்ந்தெடுக்க அவர் அதிக நேரத்தை எடுத்துக்கொள்ளவில்லை.
சுமிதர் நீ உன் திட்டத்தை தொடங்கலாம்.
ஒரே மாதத்தில் அவன் 10 ரதங்களை தயாரித்தான்.
சுமிதர் உன் யோசனைகள் மிக அருமையாக உள்ளன, உன்னை என்னுடைய உ .தவியாளனாக நியமிக்கிறேன்.
மிக்க நன்றி மகாராஜா.
சுமிதர், அவனின் குடும்பத்தின் செலவுகளை கணக்கில் கொண்டு, அவர்களை ஊரிலேயே வசிக்கச் சொன்னான்.
சில மாதங்களிலேயே, மகாராஜாவிற்கு நெரு க்கமானான். அவன் ராஜாவின் முக்கியமான நண்பர்களுக்கு செய்தி தெரிவிக்கும் தூதுவன் ஆனான்.
PSSSS....S SSSSS
சரி மகாராஜா. அப்படியே ஆகட்டும்.


மகாராஜா, சுமிதரை அதிக தூரம் செல்லவேண்டும்
என்பதினால், ரதத்திலேயே பயணம் செல்ல உத்தரவிட்டார்.
நடுவில் கஞ்சன் நகரில்
உள்ள அவனது குடுமபத்தை
பார்த்துவிட்டு வருவான்.
சுமிதரின் மகன் பள்ளியில் முதலிடம் பிடித்தான். அதனால்
அந்த பள்ளி நிறுவனர்கள் பாராட்டு விழாவிற்கு சுமிதரை
அழைத்தனர். ஆனால் அவன் செல்ல முடியவில்லை.
சில மாதங்கள் கழித்து, அவன்
மகளுக்கு திருமணம் நிச்சயம்
செய்யப்பட்டது. திருமண தேதியை
அவனே குறித்தான்.


மகளே, நான் உன் திருமணத்திற்கு ஒரு வாரம் முன்னால் தான் வர முடியும். நான் எல்லா ஏற்பாட்டையும் செய்திருக்கிறேன். நீ ஒன்றும் கவலை படாமல் , உன் நலனை கவனித்துகொள்.
திருமணத்திற்கு ஒரு வாரம் முன்னால், சுமிதர் அவன் மனைவிக்கு கடிதம் அனுப்பினான்.
அலுவலக வேலைப்பலுவால் என்னால்திருமணத்துக்கு ஒரு வாரம் முன்னால் வரமுடியாது.மிக விரைவில் திருமணத்துக்கு முன் வந்துவிடுகிறேன். திருமணத்தை தள்ளிpப் போட வேண்டாம்.
சுமிதரின் மனைவியும் , அவனது சகோதரனும் திருமணத்தை கவனித்துக்கொண்டனர்.
ஒரு மாதம் கழித்து, சுமிதர் ரதத்தில் வீடு வந்தான்.
என்னை மன்னித்துவிடு மகளே, மிக முக்கியமான பொறுப்பை, ராஜா என்னிடம் ஒப்படைத்தார். அதனால் என்னால் வர முடியவில்லை.
ஒரு ராஜா தேவையான நேரத்தில் விடுமுறை அளிக்கவில்லை என்றால், என் அந்த வேலையைச்செய்ய வேண்டும். அந்த வேலையை விட்டு விடுங்களேன் ??
மகளே, ராஜாவை குற்றம் சொல்லாதே. நான் அவரிடம் இதைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. அவரிடம் நான் கூறியிருந்தால் நிச்சயமாக எனக்கு விடுமுறை அளித்திருப்பார். திருமணத்தை விட அரசரின் பாதுகாப்பு மிக முக்கியமானது.


தாங்கள் எல்லா விஷயத்திலும் இவ்வாறு கணக்கிடுவது சரி இல்லை.
அப்படிதான் மகளே இருக்க வேண்டும். இல்லையென்றால், வரும் காலத்துக்காக சேமிக்க முடியாது.
எவ்விதத்தில் தாம் சேமிக்கிறீர்கள் ? ஒவ்வொருமுறையும் ரதத்தில் வீட்டிற்கு வருவதால் 200 பொற்காசுகள் போய்விடுகிறது.
இல்லை மகளே, நான் ஒரு பொற்காசு கூட இந்த பயணத்துக்குசெலவழிக்க வில்லை. எனக்கு இந்த வழியாக வேலை இருக்கும் போதெல்லாம், நான் இங்குவருகிறேன்.
என் மகளின் திருமணத்தின்போது இவ்வழியில் எனக்கு வேலை இல்லாததினால், நான் இங்கு வரவில்லை. இல்லையெனில் நான் 200 பொற்காசுகள் இதற்காக செலவு செய்திருக்க வேண்டும்.


நீங்கள் என்ன
சொன்னாலும் சரி,
பணத்தையும்,
பொருளையும் விட
குடும்பம் தான் மிகவும்
முக்கியமானது.
தாங்கள் பணத்திற்காகவா எங்களை தனியாக
வாழச்செய்தீர்கள்? எங்கள் சந்தோஷத்தை
துக்கத்தை, பகிர்ந்து கொள்ளாமல், நா.ங்கள்
இங்கு தவித்தோம். தாம் என்னையும் நம்
குழந்தைகளையும் உங்கள் பேச்சால், வருத்தம்
அடையவைத்தீர்கள். உங்கள் கணக்கை
கொஞ்சம் மாற்றி யோசிக்கவும்.
மனைவி உறங்கச் சென்றாள்.
என் மனைவி சொல்வது சரியே.
நான் என் வாழ்கையின் மற்றொரு
பக்கத்தை மனதில் கொள்ளவில்லை.
இனியும் நேரம் இருக்கிறது ,
நான் அவர்களை சந்தோஷ
படுத்துவேன்.
முடிவு.


ஊழல்


கோங்க்டாங் நகரை ஆட்சி
செய்தவர் மகாராஜாசங்-லீ.


ஊழல், இந்த நாட்டில் உச்ச கட்டத்தில் இருந்தது.


தாங்கள்
கவலையில்
பேசுவதுபோல்
தெரிகிறது. என்ன
ஆயிற்று ?
பு-ஷான், இந்த நாட்டில்
சாதாரண மனிதர்கள்
மற்றும் உண்மையான
மனிதர்கள் வாழ்வது
கடினமாகவுள்ளது.


எல்லோரும் வேலை செய்ய, ஏதேனும் எதிர்பார்க்கிறார்கள்.
சரியாக சொன்னீர். என்னிடம் கூட ஒரு நாள், அரண்மனையின் வேலையாட்கள், என் வேலையை செய்து முடிக்க காசு வாங்கிக்கொண்டனர்.
என்ன அசிங்கம், நாம் இதை தவிர்க்கப் போராட வேண்டும்.
இது நடக்குமா என்று எனக்கு தோன்றவில்லை. யாரும் உன்னை நம்பமாட்டார்கள். உன்னால் இதை நிரூபிக்க முடியாது.
மகாராஜா இவ்விஷயத்தை அறிவாரா என்று தெரியவில்லை. அவருக்கு இதை தெரிவுக்கவேண்டும்.
நீ சொல்வது சரியே, ஆனால் முயற்சிக்கவேண்டும்.
அடுத்தநாள் ராஜாவை சந்திக்க போகிறான்.
ஹே... நில்லு...


எங்கே செல்கிறாய் ?
நான் ராஜாவை பார்க்க விரும்புகிறேன்.
உனக்கு நடைமுறைகள் தெரியாதா ?
என்ன சொல்கிறீர்கள் ?
நீ இங்கு, முதல் முறை வந்திருப்பதுபோல் தெரிகிறது?
ஆம் அதனால் என்ன ?


இதில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை !! நீ உள்ளே செல்லவேண்டும் என்றால் பணம் கொடுக்க வேண்டும்
ஊழல்... வாசலிலேயே, ஆரம்பித்துவிட்டது.
சரி.. புரிந்தது .. எவ்வளவு கொடுக்க வேண்டும் ?
50 பொற்காசுகள் கொடுக்கவேண்டும்.
என்னிடம் அவ்வளவு இல்லை. நான் என்ன செய்வது.
திரும்பச் சென்றுவிடு.


லீ-யுஆன், வருத்ததுடன் திரும்பிபோனான். சிறிதுநாட்கள் கழித்து, திரும்பவும் வர அவன் முடிவு செய்தான்
ஒரு நாள் காலை, அவன் மறுபடியும் மாளிகைக்குப் போனான்.
நீயா ? இந்த முறையாவது ஏதேனும் கொண்டுவந்திருக்கிறாயா? இல்லையா?
கடவுளே.. என்ன கொடுமை இது ?
இங்கே பார்..... நான் உழுதுகொண்டிருக்கும், போது, எனக்கு இந்த வைரம் கிடைத்தது. ராஜாவினுடையதாக இருக்கும் என்று எண்ணி நான் அவரிடம் கொடுக்க வந்தேன்.
அவர் எனக்கு ஏதேனும் பரிசளிப்பார் என எண்ணி, இந்த வைரத்தை கொண்டுவந்துள்ளேன். அவர் என்ன தருகிறாரோ, அதில் பாதியை உனக்குத் தருகிறேன்.


ஆஹா.... இதை மிகவும் அபூர்வமான வைரம் வாலிபனே. இதேபோல் அரண்மனை பொக்கிஷத்தில், ஒன்று உள்ளது. இதை கொடுத்தால் உனக்கு அவசியம் பரிசு தருவார்கள்.
மகாராஜா எனக்கு 50 சாட்டை அடிகள் வேண்டும்.
என்ன ?
ஆம்..மகாராஜா. என் ஆசையை நிறைவேற்றுங்கள்.
சரி...உன் விருப்பபடியே ஆகட்டும்... வீரனே அவனுக்கு 50 சாட்டை அடிகளை கொடு.


மகாராஜா, என்னை அடிப்பதற்கு முன்னால், வேறு ஒருவனோடு பங்குபோட ஆசைப்படுகிறேன்.
என்ன சொல்கிறாய் ? யார் அது?
நான் உங்களைசந்திக்க வரும் போது, எனக்குக் கிடைக்கும் பரிசில் பாதியை உங்கள் வாயிற்காப்போனுக்கு கொடுப்பதாக வாக்களித்ததால்தான் என்னை உள்ளே அனுப்பினார்.. அதனால், அவனை இங்கு கூப்பிடுங்கள்..
ஆனால் தங்களுக்கு முன்னால் பங்கு போடுவது கடினம் ஆகவே தாங்கள் சற்று...
லீ யூன் இவ்வாறு செய்வதற்கு சரியான காரணம் இருக்கும் என்பதை அறிந்த மன்னர் மறைந்து கொண்டார்.


வாயில் காப்போனை உள்ளே அழைத்தார்கள்.....
நண்பரே! மன்னர் எனக்கு நல்ல பரிசளித்துள்ளார். அதை உனக்கு பகிர்ந்த ளிக்கவே உன்னை அழைத்தேன்.
ஆம்! ஆம்! என்னுடையதை எனக்குக்கொடு.
மூடனே! என்னுடைய அரண்மனையில் லஞ்சம் பெறுவதற்கு என்ன துணிச்சல் உனக்கு..? வீரர்களே இவனை கைது செய்யுங்கள்.
மன்னா! இவன் மட்டும் தவறிழைக்க வில்லை . நாடெங்கும் ஊழல் பரவியுள்ளது.
மன்னா இந்த இளைஞன் செய்தது சரிதான் ஆனால், இந்த வைரம் எங்கிருந்து இவனுக்கு கிடைத்தது?


ஒருநாள் அரண்மனையிலிருந்து வந்த ஒருவன் என் நகைக்கடையில் இதை எனக்கு விற்றான்.
அரசே! அதுவே இந்த வைரம்.
வீரர்களே,. முதலில் இதை பொக்கிஷத்திலிருந்து திருடியவன் யாரென்று கண்டு பிடியுங்கள் .
மறு நாள், ஒரு அமைச்சர்தான் அதை பொக்கிஷத்திலிருந்து திருடினார் என்று கண்டுகொண்ட அரசர் அவருக்கு தண்டனை கொடுத்து அவரை சிறையில் அடைத்தார்.
நன்றி இளைஞனே மிகவும் மகிழ்ச்சி. உன்னைப்போன்ற நாணயமிக்கவர்கள்தான் எனக்கு வேண்டும் என் மந்திரி சபையில் சேர்ந்துகொள்.
லீ யூன் நன்றியுடனும் மகிழ்வுடனும் பதவியை ஏற்றுக்கொண்டான்.
முடிவு


கோழை


கங்காராம் உறுதியான உடற்கட்டு உள்ளவன். ஆனால் மனதைரியம் இல்லாத கோழை.
ஒரு நாள்...
கங்காராம், நாங்கள் பக்கத்து கிராமத்துக்கு சென்றுவருகிறோம். வீட்டை பார்த்துகொள்.
நான் தனியாக இருக்கிறேன் நன்றாக தூங்கலாம்.
கங்காரம் திடீரென்று தூக்கத்திலிருந்து எழுந்து, ஒரு திருடன் சுவரை தாண்டுவதை கண்டான்.


கங்காராம் திருடனை கண்டதும் பயந்தான்.
அவன் குறட்டைவிட தொடங்கினான்.
நான் குறட்டை விட்டால், திருடன், நான் தூங்குகிறேன் என்று நினைத்து கொள்ளுவான்.
இவன் இந்த வீட்டு காவலாளியாக இருப்பானோ? மிகவும் தைரியமுள்ள மனிதனாக தெரிகிறான்.
அவனை எழுப்பினால், நான் சிக்கிக்கொல்வேன் அவன் எவ்வளவு ஆழமான தூக்கத்தில் இருக்கிறான் என்று கவனிப்போம்.


திருடன் கங்காராமின் தோளை ஆட்டிப் பார்க்கிறான்.
திருடன் அவனை மெதுவாக திருப்புகிறான்.... ஆனால்....
நான் திருடிக்கொண்டி
ருக்கும்போது
எழுந்துவிட்டால் அது
ஆபத்து. அதனால்
அவனை எழுப்பி,
எச்சரிக்கலாம்


திருடன் கங்காராமின் தோளில் பளீரென்று ஒரு அடி கொடுத்தான்.
THUD
கங்காராம் எழுந்தான்.
நான் ஒரு திருடன். நான் திருடப் போகிறேன். என்னை தடுத்தால் நான் உன்னை கொன்றுவிடுவேன்.
இந்த சிறு விஷயத்துக்கு ஏன் என்னை எழுப்பினாய் ?


நான் எங்கே போகவேண்டும்? நான் என் அறையில் போய் உறங்கட்டுமா?
அப்பா...கடவுளே.. நல்ல வேளை, அவன் என்னை ஏதும் செய்யவில்லை.
எனக்கு பத்து ரூபாய் கொடு நான் பக்கத்து வீட்டுக்கு செல்கிறேன்.
என்ன சொல்கிறாய் ?
நான் உன்னை பார்த்து பரிதாபம் அடைகிறேன். உன்னைபோலவே நான் ஒரு பண்ணையார் வீட்டில் காவலாளியாக இருந்தேன்.
ஒரு நாள் அவர்கள் என்னை வீட் டுக்காவலுக்கு வைத்துவிட்டு பக்கத்து கிராமத்துக்கு போனார்கள். நான் நன்றாக தூங்கிக்கொண்டிருந்தபோது வீட்டில் இருந்த பொருள்கள் எல்லாம் திருட்டுpப் போய்விட்டன.அதனால் என்னை வேலையிலிருந்து தூக்கிவிட்டார்கள். இப்போது நான் பிழைப்புக்காக திருடன் ஆகிவிட்டேன்.


நான் இந்த வீட்டில் திருடினால், உனக்கு இந்த வேலை போய்விடும். அதனால் நான் செய்த தவறை நீ இனி செய்யாதே.
கங்காராம் பத்து ரூபாய் கொடுக்கிறான், அந்த திருடன் எதையும் திருடாமல் போய்விடுகிறான்.
கங்காராம் என்ன ஆயிற்று ?
கங்காராம் திருடனுக்கு பத்து ரூபாய் கொடுத்து, வீட்டை காப்பாற்றிய முழுக்கதையையும் விவரிக்கிறான்.
தான் ஒரு கோழை என்பதை உணர்ந்துகொண்ட கங்காராம், வாட்ச்மேன் வேலையை விட்டுவிடுகிறான். ஒரு முறை நடந்த அதிர்ஷ்டம் எப்போதும் தொடராதே!
முடிவு.

# தீர்மானம்




சமர் வம்சத்து அரசரான சந்திரவர்மன் இரக்க சுபாவம் கொண்டவர், விசாலமான மனது உள்ளவர்.ஆனால் அவர் மந்திரியான குணாநிதியோ இவருக்கு நேர் எதிரானவர். ஒழுக்கமானவர், கண்டிப்பானவர்.
ஒரு நாள் மக்கள், ராஜாவை சந்திக்க வந்தனர்.
வணக்கம் மகாராஜா. நாங்கள் எங்கள் கஷ்டத்தை கூற வந்திருக்கிறோம்.
அரசே, அரசாங்கத்தின் எல்லா துறைகளின் நிர்வாகம் மீதும் புகார் சொல்லவே நாங்கள் எல்லாரும் வந்திருக்கிறோம்.
ம்ம்ம்.....
மகாராஜா, ஏழை மக்களுக்காக ஒவ்வொரு மாதமும் ஒதுக்க ப்பட்ட உணவு தானியங்கள், ஒழுங்காக வருவதில்லை.
எனக்கு வரவேண்டிய தானியங்கள் வந்து பல மாதங்கள் ஆகிவிட்டன, அரசே!
ராஜா சந்திரவர்மன் எல்லோரின் குறையையும் கேட்டார்.
உங்களின் குறைகள் எல்லாவற்றையும் அறிந்துகொண்டேன், அதை மிக விரைவில் தீர்க்கிறேன். இப்போது நீங்கள் செல்லலாம்.



எல்லோரும் சென்ற பின்.
குணாநிதி, நான் ஒரு அரசனின் கடமையை செய்யத்த வறி விட்டேனா?
மகாராஜா, இப்படியெல்லாம் நினைக்காதீர்கள் ? பல மந்திரிகள் அவர்களின் கடமையில் தவறு இழைத்திருக்கிறார்கள்
அவர்களை மாற்றுவதே, இந்த மக்களின் குறைகளுக்கு நல்ல தீர்வாகும்
எனக்கு அந்த மந்திரிகள் பற்றிய விவரம் உடனே வேண்டும்.
சில நாட்களுக்கு பிறகு
மகாராஜா, இதோ தன் கடமையை ஒழுங்காகச் செய்யாமல் இருக்கும் மந்திரிகளின் விவரம்.
அரசர் அந்தப் பட்டியலை பார்க்கிறார்.
குணாநிதி, இந்த மந்திரிகளை நான் எவ்வாறு நீக்குவேன். இவர்கள் என்னுடைய உறவினர்கள் ஆயிற்றே
நான் நன்கு அறிவேன் மகாராஜா. ஆனால் நாட்டின் மீது அக்கறைகொண்டு , இவர்களை நீக்கி நல்ல மனிதர்களை மந்திரிகளாக நியமியுங்கள்.



நல்ல ஆட்சி வேண்டும் என்றால், அந்நாட்டு ராஜா, கடுமையான தீர்மானம் எடுக்க வேண்டும். அதனால், தயங்காமல், உத்தரவிடுங்கள்.
சரி குணாநிதி, அப்படியே ஆகட்டும்.
ராஜாவின் உத்தரவுப்படி, ஒழுக்கமில்லாத மந்திரிகளை நீக்கி, புது மந்திரிகளை நியமித்தார்.
மந்திரிகள் இந்த முடிவில் கோபம்கொண்டு, ராஜாவை பார்க்க வந்தனர்.
நாட்டின் மீது அக்கறை கொண்டு தான் நான் இந்த முடிவை எடுத்தேன், இதை பற்றி வேறொன்றும் பேச எனக்கு விருப்பம் இல்லை.


மந்திரிகள் பல காரணங்கள் கூறியும், ராஜா அதை ஏற்கவில்லை. அவருக்கு தலைவலியே வந்தது.
ராஜா குணாநிதியை கூப்பிட்டார்.
குணாநிதி, இந்த முடிவில் என் குழப்பம் இன்னும் தீரவில்லை. மந்திரிகளோடு ஒருநாள் முழுவதும் இதை பற்றி சந்தித்து பேசினேன். அதனால் எனக்கு நேற்று இரவு முதல் தலைவலியாக இருக்கிறது. எந்த மருந்துகளும் வேலைசெய்யவில்லை. ஏதேனும் செய்யுங்கள் .
மகாராஜா, என் தாயார் தலைவலிக்கு மருந்து தயாரிப்பார் ஆனால் அது மிகவும் கசப்பாக , இருக்கும்.
இப்பொழுதே எடுத்துக்கொண்டு வாருங்கள். அது இந்த வலியை விட மிகவும் கசப்பாக இருக்காது.



குணாநிதி, அவனின் தாயாரிடம், ராஜாவின் தலைவலி பற்றி சொன்னான்.
மகனே, இந்த மருந்தை கொஞ்சம் குடித்தாலே, தலைவலி போய்விடும்.
குணாநிதி மருந்தை ராஜாவிடம் கொடுக்கிறான்.
ஆஆஆ.... என்ன மருந்து இது? தலைவலியை விட மிகவும் மோசமாக இருக்கிறதே.
சிறிதுநேரம் கழித்து ..
குணாநிதி, நன்றாக உணருகிறேன்.
நல்லது மகாராஜா. சற்று ஒய்வு எடுத்துக்கொள்ளுங்கள்.நான் உங்களை நாளை சந்திக்கிறேன்.


அடுத்த நாள்.
குணாநிதி, என்னிடம் ஒரு நற்செய்தி வந்தது. மக்கள், மந்திரிகளை மாற்றியதில் சந்தோஷம் அடைந்தனர், அது மட்டும் அல்லாமல், ஆட்சியும் நன்றாக நடக்கிறது.
ஆமாம் அரசே, மக்கள் ஒருதலைப்பட்சமாக இல்லாத உங்கள் தன்மையை மனதாரப் பாராட்டுகிறார்கள்.
பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு வருவது அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதே சமயம் மக்கள் இவ்வளவு விரைவில் இது குறித்து பாராட்டுவது ஆச்சரியமாகவும் இருக்கிறது.
இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது அரசே! இரண்டு நாட்களுக்கு முன் நீங்கள் கடுமையான தலைவலியால் பாதிக்கப்பட்டீர்கள்.ஆனால் சக்தி அதிகமுள்ள கசப்பான ஒரு மருந்து உங்களை குணப்படுத்தியது.
வலது
மருந்துகள் நோய்களை குணப்படுத்த; எவ்வளவு கசப்பான மருந்துகளாக இருந்தாலும் நோய் குணமாக நாம் சாப்பிட்டாக வேண்டும், இல்லையா அரசே?
உண்மை, ஆமாம்



அந்த மந்திரிகளை வியாதி என்றும்,
இந்ததீர்மானம் மருந்து
என்றும் எண்ணிக்கொள்ளுங்கள்
அரசாட்சி என்பது நமது
உடலைப்போன்றது , ஏதேனும்
தவறு நேர்ந்தால், அதற்கு
உடனே தீர்வு காண வேண்டும்.
அரசன் துணிவோடு
இருந்தால் அனைவரும் சரியாக
இருப்பார்கள்
குணாநிதி இந்த
நிகழ்ச்சி என் கண்கள்
இரண்டையும்
திறந்து விட்டது.
அன்றுமுதல், ராஜா, சந்திரவர்மன், மந்திரியின்
துணையோடு நல்ல முறையில் ஆட்சி செய்தான் , நாடும்
செழித்து வளர்ந்தது.
முடிவு



**Buy Books & eBooks Online at www.indianvedicschool.com**

**INDIAN VEDIC SCHOOL PVT LTD.**

Plot No: 29B, Laxmi Nilayam, Road No: 8, Film Nagar,
Jubilee Hills, Hyderabad - 500096, Telangana, India.
info@indianvedicschool.com www.indianvedicschool.com
+91 7337200273